சிந்தனை
தொகுதி V
இதழ் III, 1993

# செய்தித் தொடர்புறுத்தலுக்குரிய இடையூறுகளும் அவற்றை வெற்றி கொள்வதில் ஆவணப்படுத்தலுக்குரிய பங்களிப்பும்

திருமதி R. பரராசசிங்கம்

''புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல காலவகையினானே'' என்பதற்கிணங்க விஞ்ஞானத்தின் விந்தைகளான கணணிகளும், தொடர்புச் செய்மதிகளும், இலத்திரனியலும் ஆட்சி செலுத்தி வருகின்ற 20 ஆம் நூற்றாண்டின் கடைக்கூறில் வலுவான, சிறந்த செய்தித் தொடர்பினை ஏற்படுத்துவதற்குச் செய்திகளின் பெருக்கத்திற்கேற்ப பலவித ஊடகங்கள் கையாளப்படுகின்றன. இவற்றுள் வலுவான, சிறந்த செய்தித் தொடர்பூடகமாக விளங்குவது நூலகத் தகவற்றுறைச் சேவையாகும். இக்கட்டுரையானது செய்தித் தொடர்பில் தன்மை, அதன் முக்கியத்துவம் பற்றி ஆய்வு செய்வதோடு அதனைப் பாதிப்பனவாக அமையும் இடையூறுகளை இனங்காட்டி, அவ் இடையூறுகளை வெற்றி கொள்வதற்கு நூலகத் தகவற்றுறைச் சேவையில் தற்போதைய முக்கியம் வாய்ந்த சேவையாகக் கருதப்படும் ஆவணப்படுத்தல் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை விபரிக்கின்றது.

செய்தித் தொடர்பென்பது கருத்துப் பரிமாற்றத்தின் ஒரு வளர்ச்சி நிலையேயாகும். கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு இன்றியமையாத அடிப்படைச் சாதனம் மொழி. பேச்சு வழக்கு, எழுத்துவழக்கு ஆகிய இருவழக்குகளிலும் பயிலும் மொழி வழியாகவே நாம் செய்திகளை வெளியிடுகின்றோம். சிந்தனை, அநுபவம், சமூக நிலைப் பண்பு, ஆன்மீக ஒழுக்க விழுமியங்கள் ஆகியவற்றைத் தொடர்புறுத்தும் தனித்தன்மையான, மனிதனுக்கேயுரிய சிறப்பம்சமே தொடர்பாடலாகும். பேசுவோன், கேட்போன், பேசப்படும் பொருள், பேசப்படுகின்ற பொருளை உணர்த்தும் சொற்கள் என்பன செய்தித் தொடர்பில் மிகவும் அவசியமானவையாகும்.

செய்தித் தொடர்பு ஊடகங்களில் இன்று குறிப்பிடத்தக்கதொன்றாகத் திகழ்வது நூலகச் செய்தித்தொடர்பாகும். நூலகம் என்பது (நூல்+அகம்) நூல்களைத் தன்னகத்தே கொண்டது எனப் பொருள்படும். மனித இனத்தின் மாபெரும் மூளையாகத் தற்காலத்தில் நூலகம் கருதப்படுகின்றது. பல்துறைசார் நூல்களும், சஞ்சிகைகளும், தகவல் ஊடகங்களும் சேகரிக்கப்பட்டு முறைப்படி ஓரிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறிவுக் கருவூலங்களாக நூலகங்கள் விளங்குகின்றன. சான்றோரின் சிந்தனைகளும், அறிவாற்றல் மிக்கவர்களின் அறிவுத் தேடல்களும், சென்றகாலத்தின் வழுவிலாத் திறன்களும் பதிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட நூலகங்கள், அறிவுப் பசி கொண்டோர் பழமரம் தேடும் பறவைகளைப்போல நாடி வரும்போது அவர்தம் அறிவுப் பசியைத் தணிக்கின்ற அமுதசுரபியாகவும், ஊர்நடுவே நிறைந்து ஊர்மக்க

ளின் தாகத்தைத் தணிக்கின்ற நீர் நிறைந்த ஊருணியைப் போலவும் அமைந்து எல்லோருக்கும் நன்மை தருகின்ற அறிவுப் பெட்டகமாகும். சேகரித்தல், பேணுதல், பரப்புதல் என்ற வகையில் ஆயிரமாயிரம் வாசகர்களை இணைப்பதன் மூலமும், அறிவைப் பரப்புவதன் மூலமும் தொடர்பூடகமாக நூலகம் விளங்குகின்றது.

நூலகமாகிய தொடர்பு சாதனம் வாசகரையும் தகவல் / செய்தியையும் தொடர்புபடுத்துகின்றது. இதனை ஆக்கபூர்வமானதாகச் செய்யும் வகையில் நூலகங்கள் பொருத்தமான தகவல்களைப் பொருத்தமான வகைகளில் சேகரித்துப் பாதுகாத்துக் கொடுப்பது இன்றியமையததாகும். நூலகத்தின் இத் தொடர்புப் பணியானது ஆரம்பகாலத்தைவிட இன்று பரந்துபட்டதாகவும். வளர்ச்சி அடைந்ததாகவும் காணப்படுகின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நூல்களைச் சேகரித்துப் பாதுகாத்து வைக்கும் இடமாகவே நூலகம் விளங்கி வந்துள்ளது. மிகக் குறைந்த வாசக வட்டத்தினர் மட்டுமே நுகர்வோராக விளங்கினர். அன்று ஆராய்ச்சி வெளிக்கொணர்வுகளும் மிகக் குறைவாகவே காணப்பட்டன. அத்துடன் மிகக் குறைந்தளவு குறிப்பேடுகள் மட்டும் ஆராய்ச்சிகளுக்கு உதவுவனவாக இருந்தன. தற்கால நூலகச் சிந்தனைகள் தகவல் / செய்தித் தொடர்பினையே வலியுறுத்துகின்றன. ஆய்வு முயற்சிகளுக்கான தகவல்களைச் சேகரித்து வைத்து அதனை நாடிவரும் வாசகருக்கும் தகவல்களுக்கும் இடையே தொடர்பேற்படுத்துவனவாக இன்றைய நூலகங்கள் விளங்குகின்றன. ஆகவே நவீன நூலகங்கள் ஈட்டப்பட்ட அறிவுசார் விடயங்களை ஒழுங்குபடுத்தி, வாசகருக்குத் தகவல்களைப் பரிமாற்றம் செய்தும், உசாத்துணைத் தேவைக்கு உதவியும் பரந்துபட்ட தொடர்பூடகங்களாக விளங்குகின்றன. இவ்வகையில் நவீன நூலகங்கள் ஆவணப்படுத்தும் நிலையங்களாக விளங்குகின்றன எனலாம்.

உசாத்துணைச் சேவையின் ஒரு வளர்ச்சி நிலையே ஆவணப்படுத்தலாகும். இதனைக் கலாநிதி எஸ். ஆர். ரங்கநாதன் உசாத்துணைச் சேவைமூலம் சிந்தனைகளைச் சாதாரண வாசகரிலிருந்து சிறப்பு வாசகர்வரை கொண்டு செல்வதே ஆவணப்படுத்தல் எனக் குறிப்பிட்டுள்ளார். வாசிப்பு மேலோட்ட வாசிப்பு, கருத்தூன்றிய வாசிப்பு, எழுத்தெண்ணிப் படித்தல் எனப் பலவகைப்படும். வாசிப்பவர்கள் சாதாரண வாசிப்பாளர், சிறப்பு வாசிப்பாளர் எனப் பலவாறமைவர். சிறப்பு வாசிப்பாளர்களிடையே கூடிய அழுத்தத்தைக் கொடுப்பதோடு அவர்களது தேவையைப் பொறுத்து அவர்கள் நாடிவரும் பழைய, நவீனதுறை சார்ந்த புதிய தகவல்கள் / செய்திகளை இனங்கண்டு வழங்குவதிலும் ஆவணப்படுத்தலின் தொழிற்பாடு தங்கியுள்ளது. இவ்வகையில் செய்தித் தொடர்புச் சேவையையும் செய்தித் தொடர்பு வேலையையும் உள்ளடக்கமாகக் கொண்டதாக ஆவணவாக்கம் விளங்குகின்றது.

ஆவணமாக்கலின் மூலம் இடம்பெறும் செய்தித் தொடர்புச் சேவையானது, தகவல்களைக் குறிப்பெடுத்தல், அவற்றை வெளிப்படுத்தல், அவற்றைப் பாவிப்பவர்களுக்குரிய வகையில் ஒழுங்குபடுத்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். வாசகரின் உண்மையான தேவையை அறிந்து அதாவது வாசகருடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய தகவல்களை நூலகத்தில் அவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் வழிமுறைகளைச் செய்து கொடுத்தல் போன்றவை இதனுள் அடங்கும்.

சமூக அழுத்தங்களின் கீழ் திட்டமிட்ட ஆராய்ச்சிகளும், விஞ்ஞான முன்னேற்றங்களால் ஏற்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களும் மிகக்கூடுதலான ஆராய்ச்சி விடயங்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றன. முன்னைய காலத்தைப் போன்று ஆய்வாளர் தமக்குத்தாமே உதவுபவர்கள் என்றநிலை இன்று இல்லை. ஏனையோர் செய்த வேலை

களைத் தொகுத்து வைப்பதன் மூலம் ஆய்வாளர்களைத் தூண்டி, புதிய ஆய்வுகளுக்கு வழிகோல முடிகின்றது. இத்தூண்டுதலானது,

1. நூலகச் செய்தித் தொடர்பு

2. நூலக செய்தித் தொடர்புச்சேவை

3. மொழிபெயர்ப்புச் சேவை

என்ற மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

### தொடர்புச் சேவை எதிர்நோக்கும் இடையூறுகள்

சர்வதேச செய்தித் தொடர்புச் செய்மதிகள், மற்றும் கணனிகளின் தொடர்புகளிடையேயும் நவீன செய்தித் தொடர்புச் சேவை பலவித இடையூறுகளை எதிர்நோக்குகின்றது. விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்களிடையே பொருத்தமான செய்திப் பரிவர்த்தனை செய்வதில் உலகளாவிய ரீதியில் இன்றும் தடைகள் ஏற்படுகின்றன. தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள அதித வளர்ச்சி அதித இடையூறுகளை ஏற்படுத்தி உள்ளது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### மொழியால் ஏற்படும் தடை

இது மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பின்போது ஏற்படுவதாகும். ஒருவர் கையாளும் சொற்பிரயோகத்தை மற்றவரால் விளங்கிக் கொள்ள முடியாதபோது தொடர்பில் இடையூறு ஏற்படுகின்றது. உதாரணமாக 'பிரக்ஞை' என்ற சொல் ஒரு வாக்கியத்தில் இடம் பெறும்போது அச்சொல்லின் அர்த்தம் புரியாத ஒருவருக்கு வாக்கியமே புரியாதநிலை ஏற்படும். மேலும் ஒரு விடயத்தை இயந்திரங்களைப் பயன்படுத்தும்போது இயந்திரத்திற்கேற்ப அமையும் புதிய மொழி, வெளியிடுவோனுக்கும், வாசகனுக்குமிடையே ஒருமித்த தொடர்பேற்படுவதைத் தடுக்கின்றது.

### பெருந்தொகையாக வெளிவரும் வெளியீடுகள் இலக்கிய விமர்சனங்கள்

பெருந்தொகையான வெளியீடுகளிடை பொருத்தமானவற்றைத் தேர்வு செய்ய உதவுவது விமர்சனம். விமர்சனம் செய்பவர்கள் குறிப்பிட்ட சில கொள்கைகளுக்கிணங்க விமர்சிப்பவர்களாக இருப்பின் நூலுடனான வாசகரது தொடர்பை அது தடுப்பதாக அமைகின்றது.

### பிரசாரத்தால் ஏற்படும் குழப்பம் - ஏற்படுத்தும் தடை

சில கொள்கைகளுக்காகச் செய்யப்படும் பிரசாரமானது, குறிப்பிட்ட தகவல்களை மிகைப்படுத்தியும், சிலவற்றைக் குறைவு படுத்தியும் விளக்குகின்றது.

### விளங்காத நிலை

மொழியில் கையாளப்படும் புதிய சொற்பிரயோகங்களாலும், ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள் இருக்கின்றபோதும் தொடர்பு பாதிக்கப்படுகின்றது. இவ்வகையில் குறியீட்டுச் சொற்களின் பயன்பாடும் இத்தகைய நிலையை ஏற்படுத்துகின்றது.

### பிரசுரநேரம், மொழிபெயர்ப்பு மீள வலியுறுத்தல்

ஒரு தகவல் பிரசுரத்திற்குக் கொடுக்கப்படும்போது பிரசுரமாவதற்கிடையில் அத்தகவலில் மாற்றங்கள் ஏற்படவும் கூடும். இவ்வாறே குறிப்பிட்ட மொழியில் வெளிவரும் வெளியீடுகள் அம்மொழி தெரியாதவரைச் சென்றடைய முடியாத நிலையும் காணப்படுகின்றது. ஆய்வாளர்களால் வெளியிடப்பட்ட விடயங்களைத் தொகுத்துத் தரும் வெளியீடுகள் மிகை வெளியீடுகளாக அமைந்து வாசிப்போர் மூலம் எது?

நகல் எது? எனத் தீண்டாடவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

## செலவு

பிரசுரத்திற்கு ஏற்படுகின்ற செலவு, நேரடிச் செலவாகவும், மேலதிக செலவாகவும் அமைகின்றது. இச்செலவுகள் தொடர்புக்கு இடையூறாக அமைகின்றன.

## பாடமாற்றம், இடப்பெயர்வு

ஒரு பாடப்பரப்பிலிருந்து மற்றொரு பாடப்பரப்பிற்கு பாடமாற்றம் செய்யப்படும் நிலை பாடப்பரப்புக்கள் மாற்றமுறும் போதும், புதிய பாடப்பரப்புக்கள் உருவாகும் போதும் ஏற்படுகின்றது.

மிகையான விஞ்ஞான வளர்ச்சியாலும் வெவ்வேறு துறைகளின் அபிவிருத்திகளினாலும் துறைகளை இனங்காண்பதிலும், துறைசார் விடயங்களை ஒழுங்குபடுத்துவதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன. முதலாம் உலகயுத்தத்தின் பின் ஆய்வுகளை அடிப்படையாக வைத்தே தொழில்துறைகள் பெருகவேண்டியிருந்தன. பாடப்பரப்புக்களின் மாற்றம், புதிய கண்டுபிடிப்புக்கள், பழையவை வெளிக்கொணரப்படுதல் போன்றவை இவற்றின் அடிப்படைகளாக இருந்தன. படிமுறைகளான ஒழுங்கான தொடர்பு ஆய்வுகளை அகலித்துக்கொண்டு போகின்றது. ஆய்வாளர் ஒருவர் வெவ்வேறு துறைகளில் இருந்து பல்வேறு தகவல்களைத் தனது ஆய்வுக்குத் திரட்ட வேண்டியுள்ளது. ஆய்வுகள் பூரணமாக அமைவதற்கும், ஆய்வாளர் தேவைகளை நிறைவு செய்வதற்கும் செய்தித் தொடர்புக்குள்ள தடைகள் இயன்றளவு குறைக்கப்பட வேண்டும்; நீங்கப்பட வேண்டும்.

## இடையூறுகளை நீக்குவதற்கான வழிமுறைகள்

செய்தித் தொடர்பு எதிர் நோக்கும் இடையூறுகளை நீக்க வேண்டியது இன்றியமையாததாகும். இத்தடைகளுள் முக்கியமானதும், முதன்மையானதாகவும் விளங்குவது மொழித்தடையாகும். விஞ்ஞான தொழில்நுட்பம் சார்ந்த மொழி ஒருவனது சொந்த மொழியாக இருந்தால் மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது. மதிநுட்பம் வாய்ந்த, உயர் கல்விகற்ற முதலாவது நவீன பரம்பரையிலுள்ள நியூட்டன், கொப்ஸ் போன்றோரை விளங்கிக் கொள்வதற்கு இரண்டாவது உலக யுத்தம் வரை கடினமாகவே இருந்தது. இன்றும் கூட விளங்கிக் கொள்ள முடியாதநிலை காணப்படுகிறது.

உலக இலக்கியங்களின் பிரிவுகள் பெரும்பாலும் ஐரோப்பிய அடிப்படையிலானவையாகவே இருக்கின்றன. தொழில்நுட்பம் சார்ந்த தகவல்களில் 2/3 பங்கு ஆங்லகித்திலேயே காணப்படுகின்றன. பௌதீகத்துறையில் 92.28 வீதமான வெளியீடுகள் 1965 வரை ஆங்கில, ரஷ்ய, பிரெஞ்சு, ஜேர்மன் தகவல்களைக் கொண்டமைபவையாக இருந்தன. அண்மைக்காலங்களிற்றான் ஆசிய மொழிகள் இத்தகவல்களைப் பெறத் தொடங்கியுள்ளன. ஜப்பான் அண்மையில் ஆவணவாக்கத்தில் மறுமலர்ச்சி பெற்றுள்ளது. ஜப்பானிய விஞ்ஞான சஞ்சிகைகள் வெளியிட்ட குறிப்புகளின் படி ஜப்பானிய நூல்நிலையம் 4183 தலையங்கங்களைக் கொண்ட சஞ்சிகையை வெளியிட்டுள்ளது. இவ்வாறே சீனாவிலும் உற்பத்தி பெருகியுள்ளது. இவ்வளர்ச்சி இன்னும் அதிகரிக்கக்கூடுமென எதிர்பார்க்கலாம்.

இன்று விஞ்ஞான வளர்ச்சியால் இயந்திரங்களே பெருமளவு செயல்களைப் புரியும் நிலை காணப்படுகின்றது. தொடர்புகளுக்கு இயந்திரங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இயந்திரங்களின் பயன்பாடும் மொழியில் மாற்றத்தை ஏற்படுத்துவதைக் காணலாம். கணணியின் வருகையின் பின்னர், அதற்கான மொழியே கையாளப்படுகின்றது. இந்த மொழியைக் கற்பதில், புரிந்து கொள்வதில் விசேட அக்கறையும்' நிபுணத்துவமும் தேவைப்படுகின்றது.

தொடர்புக்கு மொழியால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கு பன்மொழி மொழிபெயர்ப்புப் பயிற்சி தேவைப்படுகின்றது. பன்மொழியாற்றல் இல்லாத ஆய்வாளனுக்கு இந்நிலையில் தொடர்பு கடினமாகிவிடுகின்றது. இதைத் தவிர்க்க விஞ்ஞான மொழிகளைக் கற்பதற்கு நூல் நிலையங்களும், தகவற்தொடர்பு நிலையங்களும் அம்மொழிக் கற்கைகளை ஊக்குவிக்க வேண்டும். முறையாக அமைக்கப்பட்ட மொழிபெயர்ப்புத் திட்டமும் இவ்வகையில் உதவக் கூடியதாகும். நூலகர் இதனை உற்சாகப்படுத்துவதோடு, தொழில்நுட்ப முறைகள், தானியங்கி முறைகளைப் பயன்படுத்தி இத்தேவையை நிவர்த்தி செய்யலாம்.

தொடர்பைப் பாதிக்கும் காரணிகளில் அளவுக்கதிகமான வெளியீடுகளால் ஏற்படும் இடையூறுகளும் அடங்கும். வெளியீடுகள் புதிதானது என்பதற்காக மட்டுமன்றிச் சமூகத்தைக் கவர்ந்து கொள்வதற்காகவும் வெளியிடப்படுகின்றன. இவற்றைக் குறைப்பதற்கு நுட்பமான கவனமும், திறமையும் தேவைப்படுகின்றன. பத்திரிகைகள், இலக்கிய விமர்சனம், மாதாந்த, வாராந்த சஞ்சிகைகள் செய்தித் துணுக்குகள், மலிவுப் பதிப்புக்கள் போன்றவையாக இவை பெருகிக் காணப்படுகின்றன. இவை யாவும் அவர்தம் சொந்தப் படைப்புக்கள் எனக் கூறமுடியாது. பலமொழிகளில் வெவ்வேறுவிதமான ஒரேவிடயமே மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருக்கும். இதனால் 'கூறியது கூறல்' என்ற நிலைமை உருவாகின்றது. இது செய்தித் தொடர்பில் ஏற்படுகின்ற ஒரு எழ்மை நிலையாகும். ஆய்வாளர் சிலர், தம் வெளியீடுகளை மிகைப்படுத்துவதற்காக ஏற்படுத்துகின்ற ஒரு தந்திரோபாய முயற்சியே இது. இத்தகைய வெளியீடுகள் மூலம் எது? பிரதி எது? என அறிந்து கொள்ளமுடியாத நிலையில் வாசகரைத் திண்டாட வைக்கின்றன. தரமான ஆய்வுகளை இனங்காண்பதில் சிக்கலை ஏற்படுத்துகின்றன. இவற்றை வாசிப்பதாலுண்டாகும் பயன்பற்றி முடிவுசெய்யமுடியாதுள்ளது.

ஏறத்தாள உலகில் நாலாயிரம் பிரித்தெடுத்தல் பட்டியலாக்க நிறுவனங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இவற்றின் அளவு செயற்பாடு, விஸ்தரிப்பு அவற்றுக்குரிய செல்வாக்கு போன்றவை வேறுபடும். இவற்றிலுள்ள (INSPEC) தரவுகளின்படி ஐநூறுக்கும் மேற்பட்ட அலகுகளை நாளொன்றுக்குக் கொண்டிருக்கும்.

செய்தித் தொடர்புப் பெருக்கத்தைக் குறைப்பதற்கு வளர்ந்து வருகின்ற ஆக்ககர்த்தாக்களும், தகவல்களைச் சேகரிக்கும் ஆசிரியர்களும் முறையாக நெறிப்படுத்தப்பட வேண்டும். அதேபோல நூலகர்களும் தகவல் தருவோரும் தகவல்களை வடிகட்டி உண்மையான பிரதிகளையும், உபயோகமான பொருளடக்கங்களையும் ஆய்வாளர்களிடையே கொடுக்க வேண்டும். விஞ்ஞானிகளும் தகவல்களை உடனடியாக அவற்றை எதிர்பார்ப்போருக்குக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகப் பட்டியலாக்கமும் (நூற்பெயர், அகரவரிசை) மிகவும் முக்கியமாகத் திட்டமிட்டுச் செய்யப்பட வேண்டியதாகும். இதன் மூலம் விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்களுக்கு அவற்றை அறிமுகப்படுத்துவதுடன் உரியவற்றை உரிய நேரத்தில் இனங் காணவும் முடியும்.

சிக்கலான தகவல்கள், பிழைகள் என்பவற்றுடன் தொடர்பு உடைய ஒரு விடயம் குழப்பமாகும். சகல குழப்பங்களுக்குமுரிய சொற்பிரயோகம் 'இரைச்சல்' என்பதாகும் சில இரைச்சல்கள் தவிர்க்கமுடியாதவையாகும். நவீன தொழில் நுட்பத் தகவற் செயற்பாடுகள் எல்லாத் துறை சார்ந்த தகவல்களையும், ஆவணங்களையும் சேர்த்துவைப்பதாக அமைகின்றது. சேகரித்து வைக்கப்படும் ஒன்று சிலவேளைகளில் வெளியிடப்படாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் அது தேவையானவர்களுக்குக் கிடைக்ககூடியதாயிருக்கும்.

தொடர்பு குழப்பமடைவதற்கு அரசியல் அணுகுமுறைகளின் தாக்கங்களும் வெளி

யீடுகளில் கலந்திருப்பதும் ஒரு காரணமாகும். வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சஞ்சிகைகளின் தேவையற்ற விடயங்கள் கலந்திருக்கின்றன. வகை தொடர்பைக் குழப்புவனவாகும்.

கணனிகளின் மிகையான பெருக்கத்தினாலும் கருவிகளின் நவீன தோற்றப்பாடுகளாலும் மிகையான விண்ணாய்வுகளும், கணனித் தகவல்களும் வந்துசேர்வதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

தவறான பட்டியலாக்கமும் ஒருவகைக் குழப்பமாகும். 1940 இல் தரப்பட்ட தரவேடுகளிலும் பார்க்க 1970 இல் தரப்பட்ட தரவேடுகள் அதிகமாகும். இதனால் மனிதனால் கிரகித்துக் கொள்ள முடியாதளவிற்குத் தகவற் பளு கூடிவிடுகின்றது.

இத்தகைய இடையூறுகள் தொடர்பைப் பாதிக்காமலிருப்பதற்குத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யும் நிலையங்கள் உண்டாக்கப்படவேண்டும். இவை குழம்பிய தகவல்களை வடிகட்டி வாசகருக்குக் கொடுக்கவேண்டும். அதிகமான விஞ்ஞானிகள் அரசியற் செல்வாக்கிற்கு அப்பாற்பட்டவர்கள் எனினும் சிலர் அச்செல்வாக்கிற்குட்பட்டவர்களாகவுமுள்ளனர். இவர்கள் கவனமாகப் பின்தொடரப்பட்டு அரசியற் குற்றவாளிகளாகாமற் தடுக்கப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நூலகர்களும், தகவல் விஞ்ஞானிகளும் இத்தகைய செல்வாக்குகளுக்கு ஆட்படாமல் தத்தம் நூலகங்களை இத்தகைய குழப்பங்களை நீக்கி வழிநடாத்தவேண்டும். இத்தகைய நூல்களைப் பட்டியலாக்கம் செய்யும்போது கூடிய கவனம் செலுத்திப் பிழையான பட்டியலாக்கங்களைக் கடுமையாக நீக்கவேண்டும். இம்முறைக்குக் கணனியைக் கையாளலாம்.

நவீன செய்தித் தொடர்புக்கு மற்றுமொரு தடையாகக் கருதப்படுவது விளக்கமில்லாத மொழியாகும். ஒரு பொருளைக் குறிக்கின்ற பல சொற்கள், பல பொருட்களைக் குறிக்கின்ற ஒரு சொல், புதுச் சொல்லாக்கம் போன்றவை தடையாக உள்ளன. உலகில் வேகமான முன்னேற்றத்திற்கும், புதிய எண்ணக்கருக்கள் தோன்றுதற்கும், தொழில்நுட்ப, தொழில் நுணுக்கத் துறைகள் வளர்வதற்கும் வேகமான புதிய சொல்லாக்கம் தவிர்க்கமுடியாததொன்றே. எனவே இலக்கியப் புத்தாய்வு என்ற தலையங்கத்தில் மேற் கூறிய விடயங்கள் நேரடியாகத் தாக்குகின்றன. இதைவிடச் சிறிய அளவில் துறைசார் சொற்கள் விடயங்களில் தெளிவின்மையை ஏற்படுத்துகின்றன. மேலும் சொற்களின் முதலெழுத்துக்களைத் தொகுத்து உருவாக்குகின்ற சொற்பிரயோகமும் தொழில் நுட்பத்தில் பல குழறுபடிகளை ஏற்படுத்தியுள்ளன. மொழிவிளங்காமையால் ஏற்படும் இத்தகைய தடைகளைப் பின்வரும் வகைகளில் தீர்க்கலாம்.

1. அவ்வத்துறைசார்ந்த அறிஞர்களைத் தனித்தனியே இச் சொற்களைப் பட்டியலாக்கம் செய்யும்படி கூறுதல்.

2. இவற்றுக்கான அகராதிகளை உண்டாக்குதல்.

3. U. S. S. R., U. S. A. போன்ற நாடுகளில் இவைசார்ந்த புத்தகங்கள் வெளிவருகின்றன. இவை போன்ற வெளியீடுகள் மேலும் வெளிவரத் தூண்டலாம்.

4. யுனெஸ்கோ போன்ற ஸ்தாபனங்கள் இதில் ஈடுபட்டுப் பங்காற்றலாம்.

செய்தித் தொடர்பைத் தடைசெய்யும் மற்றுமொரு காரணி வெளியீடுகள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றை வெளியிடுவதற்கெடுக்கும் நேரமாகும். குறிப்பாக, விஞ்ஞானத் தகவல்கள் காலதாமதமாக வெளிவரும்போது பயனிழந்து போகின்றன. வெளியீடுகள் பற்றிய விமர்சனங்களும் காலதாமதமாக வெளிவருவதாற் பயனிழந்து

போகின்றன. சிலசமயங்களில் ஒருவிடயம் பற்றிய மீள்வலியுறுத்தல் வெளிவருவதற்குக் கூடக் கிட்டத்தட்ட ஒரு வருடம் எடுக்கின்றது. மொழிபெயர்ப்பு சார்ந்த விடயங்களில் இன்றும் சிரமம் இருப்பது போன்றே ஒரு செய்தி சார்ந்த வேறுபட்ட, பிழையான தகவல் கொடுக்கப்படுவதால் உண்மை வெளிவருவது அதிக சிக்கலாகின்றது.

நேரத்தினால் ஏற்படும் தொடர்புத் தடையை நீக்குவதற்கு, நூல்நிலையங்கள் ஆவணப்படுத்தற் சேவையை ஏற்பாடு செய்யவேண்டும். ஆசிரியருக்குக் கடிதங்கள், இலத்திரனியற் கடிதங்கள் (எலெக்ரோனிக் செட்டர்) என்பனவும் சர்வதேச ரீதியாக எல்லா மொழிகளிலும் செய்யப்படவேண்டும். நேர அலகைக் குறுகியதாக்குவதற்கு மேற்படி தகவல்கள் உதவும். உண்மையான அச்சுப் பிரதிகளை விநியோகிக்க முன்னர் நகற்பிரதிகளை விநியோகித்துத் தெரிவு செய்யப்பட்ட தகவல்களைச் சேகரிக்கலாம். விரைவான பதிப்புக்களை கணணிகள் மூலமும் நுண்அணு பிரசுரத்தின் மூலமும் செய்யலாம்.

தகவற் தொடர்பிற்குப் பொருளாதாரமும் ஒருவகையில் தடையாக உள்ளது. பிரசுரஞ் செய்வதற்கு ஏற்படுகின்ற செலவும், மேலதிகச் செலவுகளும், பிரசுரத்துறை பலவகைகளிலும் பெருகியிருந்த போதிலும் தொடர்பைத் தடுப்பனவாக அமைவதைக் காணலாம். தேசியவர்த்தகத் செய்தித் தொடர்புகள் உதாரணமாக அஞ்சல், தொலைபேசி, தந்தி, ரெலக்ஸ் போன்றவற்றுக்கான செலவுகள் அபிவிருத்தியடையாத நாடுகளிலேயே மிகவும் உயர்ந்து செல்கின்றன.

அத்துடன் வெவ்வேறு காலங்களில் இடம்பெறும் மாநாடுகளுக்குச் சென்று வருவதால் ஏற்படும் செலவுகள் மிகவும் அதிகரித்துள்ளன. பெரும்பாலான உலக நாடுகள் மிகவும் வறுமைவயப்பட்டவை. இந்நாடுகளில் செய்தித் தொடர்பிற்கு ஒதுக்கப்படும் நிதி மிகக் குறைந்தளவாகவே உள்ளது.

பொருளாதாரம் என்ற வலுவான தடையை வெற்றிகொள்வதில் நூலகர்களும், அதனைச் சார்ந்தவர்களும் பெருமளவு உதவக்கூடும். உலகெங்கும் உள்ள நிறுவனங்களிலிருந்து தகவல்களைச் சேகரித்துத் தேவையானபோது கொடுக்கலாம். நூலகர்களும், தகவல்தரும் ஆய்வாளர்களும் அந்தந்த நிறுவனங்களை அணுகி அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு இலவச போக்குவரத்து ஒழுங்குகளை ஏற்படுத்தலாம்.

நூல்நிலையங்கள் கட்புல, செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்தி மாநாட்டுரைகளைப் பதிவுசெய்து வாசகருக்கு வழங்கலாம். நூலகங்கள் யாவும் இணைந்து தமக்கிடையேயுள்ள வளங்களைக் கூட்டுச்செயற்பாட்டின் மூலம் தமக்கிடையே பரிமாறிக் கொள்வதும் இத்தகைய தடைகளைத் தாண்டுவதற்கு உதவியாக அமையும்.

தகவற் தொடர்பு எதிர்நோக்கும் மற்றுமொரு இடையூறு செய்தி இடப்பெயர்வாகும். தற்காலத்தில் தொழில்நுட்பத்துறை மிக வேகமாக முன்னேறி எல்லோரும் அறியவேண்டும் என்ற ஊக்குவிப்பைத் தருகின்றது. இதற்கு மூளை அசைவாக்கமும், பௌதிக அசைவாக்கமும் தேவை. உதாரணமாகப் பததாண்டுகளுக்கு ஒருமுறை விமானத்துறைப் பொறியியல் நுணுக்கங்கள் சாதாரண விமானங்களிலிருந்து சுப்பர்சோனிக் விமானங்கள் வரை விரைவான வளர்ச்சியைக் கண்டுள்ளதோடு விண்வெளிப் பயணத்தையும் ஊக்குவித்து வருகின்றன. இத்தகைய முன்னேற்றங்களால் குறுகிய கால எல்லைக்குள் புதியதுறைகளின் வளர்ச்சி விரைவு படுத்தப்படுகின்றது. இது வேகச் செய்தித் தொடர்பில் அழுத்தம் தரும் பிரச்சினையாக அமைகின்றது.

செய்தி இடப்பெயர்வினால் ஏற்படும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஒருதுறையில் இருந்து மற்றைய நாட்டிற்கும் விரைவாகச் செல்கின்ற படப்பிடிப்பு, தொலைபேசி என்பவற்றைக் கையாளலாம்.

### இன்று எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்

இன்று எமது நாட்டில் இருக்கின்ற நூலகங்களும், வாசகர்களும் மிகப்பெரிய அளவில் பல்வேறு நெருக்கடிகளையும், இடர்பாடுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு போராட்டச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம்மத்தியில் உள்ள நூல்நிலையங்களையும், அவற்றில் அடங்கியுள்ள பெறுமதிமிக்க, கிடைத்தற்கரிய நூல்களையும் உயிரைவிடவும் மேலாக மதித்துப்பேணி எமது இளம் சந்ததியினருக்கு ஒப்படைக்கவேண்டிய பாரிய கடமை எமக்கு உண்டு.

விமானக் குண்டு வீச்சுகளும், எறிகணை வீச்சுக்களும் தமிழ் மக்களின் உயிர்கள், உடமைகள், கட்டிடங்கள், கோயில்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றை அழித்து வருகின்ற இவ்வேளையில் நூல்நிலையங்களில் உள்ள புத்தகங்களைப் பாதுகாப்பதென்பது எமது சக்திக்கும் அப்பாற்பட்ட செயலே. எமது மாபெரும் பொதுசன நூலகம் எரிந்து நீறாகியமை நாம் ஒவ்வொருவரும் நினைவுகூர வேண்டிய மிகப்பெருந் துயரசம்பவமாகும்.

நூல்நிலையக் கட்டடத்தையும், அதற்குள் பேணி வைக்கப்பட்ட ஆவணங்களையும் பேணுவது ஒருபுறமிருக்கத் தற்போதைய நிலையில் புதிதாக வெளிவருகின்ற பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களை உடனுக்குடன் காலம்தாழ்த்தாது பெற்று வாசகருக்குக் கொடுப்பது கடினமானதாக உள்ளது. போக்குவரத்துக் கஷ்டங்களால் நாளாந்த தினசரிகள், வராந்த மாதாந்த வெளியீடுகள் மிகவும் காலம் தாழ்த்தியே கிடைக்கின்றன. காலம்தாழ்த்திக் கிடைக்கின்ற வேறு நூல்களும் அவற்றின் உண்மையான விலையிலும் பார்க்கப் பலமடங்கு அதிகரித்த விலையிலேயே கிடைக்கின்றன. சில ஆய்வேடுகள் சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றை வாசகரின் தேவை கருதிக் கட்டாயம் வாங்கவேண்டிய நிலையிலுள்ள அதேவேளை பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

கணனி போன்ற நவீன சாதனங்களின் உதவியினால் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டு, உடனுக்குடன் ஆய்வறிக்கைகளும் செய்திகளும் மற்றும் வெளியீடுகளும் வெளிவருகின்ற போதிலும், நவீன துறைகள் சார்ந்த முக்கியமான ஆய்வுகள், அறிக்கைகள் இங்கு வராமலே இருந்துவிடும் நிலையும் காணப்படுகின்றது. இதனால் இங்கு வாசிப்பதில் ஆர்வமும், அறிவைப் பெருக்குவதில் அக்கறையும் காணப்பட்டபோதிலும் இத்தகைய தடைகளால் புதிய தகவல்களை அறிய முடியாதுள்ளது.

நூலக வாசகர்கள் தமது வாழ்விடங்களிலிருந்து திடீரென இடம் பெயர்தல், வீதிகளிற் செல்லும்போது திடீரென ஏற்படும் விமானக் குண்டுவீச்சு, எறிகணை வீச்சுக்களால் உயிர் பிரிதல், போக்குவரத்துச் சிரின்மையால் தகுந்த நேரத்திற்கு வரமுடியாமை போன்ற காரணங்களால் வாசகர்க்ளால் எடுத்துச் செல்லப்படும் நூல்கள் அழிந்துபோகும் அல்லது காணாமற்போகும் நிலை காணப்படுகின்றது.

நூலகர் நேரடியாகக் கொழும்புக்குச் சென்று தேவையான தகவல்களை, வெளிவந்த நூல்களைப் பெற்றுவர முடியாமல் உள்ள அதே நேரம், கணனி போன்றவற்றைக் இங்கு தருவிப்பதற்குரிய பொருளாதார வளமும் குறைவாகவே உள்ளது. இந்நிலையில் நூல்நிலையம் ஆய்வாளனது அறிவுத் தாகத்தை முற்றாகத் தீர்க்கமுடியாத ஒரு துரதிஷ்டமான நிலையிலேயே உள்ளது. குறைந்த வளங்களை மாத்திரம் கொண்

டுள்ள அதேவேளை நிறைவான சேவையை ஆற்ற வேண்டியது நூலகங்களின் கட்டாய கடமையாக உள்ளது.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் யாவும் உண்மையானவையும், உத்வேகமானவையு மாகும். நூலக தகவல் விஞ்ஞானத்துறை யும், செய்திப் பரிமாற்றத்துறையும் இன்றும் இங்கு பூரணமாக விரிவான வளர்ச்சியை எய்தவில்லை. எனினும் எதிர்வரும் காலத் தில் இத்தகைய சவால்களைச் சமாளிக்கும் நம்பிக்கையுடன் செயற்படுவோம். □

## அடிக்குறிப்புக்கள்


1. Encyclopedia of Library and information science Vol. 7. PP. 251 – 263.
2. Herald of Library Science Vol. II No, 1, Jan,, 1972.
3. Herald of Library Science Vol. II No. 2, April, 1978,
4. Documentation Service by Dr. S. R. Ranganathan.
5. Communication of Scientific Information ed. by S. B. Day.
6. Barriers to effective Communication in the Scientific World.